GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

FA8A

6586–25

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours — Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "If there are two reasonable constructions, we must give effect to the more lenient one". Explain with reference to penal statutes.

   "இரண்டு நேரிய பொருள் விளக்கம் இருக்குமேயாயின் அவைகளில் கண்டிப்பு குறைவான ஒன்றையே பொருள் கொள்ள வேண்டும்". இது தண்டனைச் சட்டங்களுக்கு பொருந்துமா என்பதை விளக்குக.

2. Analyse the doctrines laid down by the Supreme Court in interpreting Constitution of India.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தினை பொருள் விளக்கம் காண்பதற்காக உச்ச நீதிமன்றம் வகுத்த கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்க.

3. Explain about the procedural requirements for enactment of subordinate legislation in India under the General Clauses Act, 1897?

   பொது வகையங்கள் சட்டம் 1897–ன் கீழ் சார்புச் சட்டம் ஒன்றினை இயற்றும் பொழுது தேவைப்படும் நெறிமுறைகளைப் பற்றி விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss about the general principles relating to operation of statutes.

   செய் சட்டம் செயலாக்கம் தொடர்பான பொது நெறிமுறைகளைப் பற்றி விவாதிக்கவும்.

5. Explain the doctrine of Harmonius Construction.
ஒத்திசைவு பொருள் விளக்கம் காணல் கோட்பாட்டினை விளக்குக.

6. What are the different kinds of statutes with reference to object?
நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய் சட்டங்களின் வகையை விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Use of Dictionary
அகராதியின் பயன்

(b) Bye laws
உப விதிகள்

(c) ejusdem generis
இனம் கண்டு பொருள் கொள்ளல்

(d) Progressive Construction
முன்னேற்ற பொருள் விளக்கம்

(e) Saving Clause
பாதுகாக்கும் உட்கூறு

(f) Noscitur – a – sociis
தொடர்பு கண்டு பொருள் கொள்ளல்

(g) Expressio unius est exclusio alterius
வெளிப்படைக் குறிப்பு விலக்கும் மற்றவைகளை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. As per Section 77(1) of the Road Traffic Act, 1960, "a driver causing accident shall stop after the accident". The driver of the Motor Vehicle stopped for a moment after causing an accident and then ran away. Explain what kind of interpretation may be adopted in this case.

சாலைப் போக்குவரத்துச் சட்டம், 1960–இன் பிரிவு 77(1)–ன் படி "விபத்தை ஏற்படுத்தும் ஓட்டுநர் விபத்துக்குப் பிறகு நிற்க வேண்டும்". ஒரு மோட்டார் வாகன ஓட்டுநர் விபத்தை ஏற்படுத்தியபின் மோட்டார் வாகனத்தை சில நிமிடம் நிறுத்திவிட்டு பின்பு தப்பியோடினார். இந்த வழக்கில் எந்த மாதிரியான பொருள் விளக்கம் கையாளப்பட வேண்டும் என்று விவரிக்க.

9. "Vegetables" are given tax exemption under State Sales Tax Act by State Government. Bharathi a betel leaves seller, claims tax exemption. Decide.

மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் மாநில அரசு காய்கறிகளுக்கு வரி விலக்கு அளிக்கிறது. பாரதி என்ற வெற்றிலை வியாபாரி தனக்கும் வரி விலக்கு கோருகிறார். முடிவு செய்க.

10. "S" was prosecuted for an offence under a penal statute. After the charges were framed but before the conclusion of the trial, the statute was amended and the punishment for the offence was reduced from life imprisonment to imprisonment for a period of seven years. On conviction "S" claims the benefits of the amendment of the statute. Decide.

தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக "S" என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட பிறகு, ஆனால் விசாரணை முடிவதற்குள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு குற்றத்திற்கான தண்டனையை ஆயுள் தண்டனையில் இருந்து ஏழு ஆண்டு சிறை தண்டனையாகக் குறைக்கப்பட்டது. "S" தண்டனை விதிப்பின் போது சட்டத்திருத்தத்தின் பலனை கோருகிறார். தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA8B**

**6587–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

LAND LAWS

Time : $2\frac{1}{2}$ hours     Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the rights and liabilities of Ryot and characteristic of Patta under Ryotwari System?

   ரயத்தவாரி முறையின் கீழ் ரயத்தின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் பட்டாவின் முக்கிய அம்சங்கள் என்ன?

2. What are the procedures followed to acquire Surplus Land and determine Compensation under T.N. Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.

   தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்பு பகுதியை நிர்ணயித்தல்) சட்டம் 1961ன் கீழ் உபரி நிலத்தை கையகப்படுத்தவும் மற்றும் இழப்பீடு நிர்ணயம் செய்யவும் என்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

3. How the land is acquired under the Land Acquisition, Rehabilitation and Resettlement Act 2013?

   2013 ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டத்தின் கீழ் எப்படி நிலம் கையகப்படுத்தப்படுகிறது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is the principle of Eminent Domain? How is it relevant in India for acquiring property?

   சொத்தெடுப்புரிமை கொள்கை என்றால் என்ன? இந்தியாவில் சொத்துகளை கையகப்படுத்துவதில் அதன் முக்கியத்துவம் என்ன?

5. Explain the salient features of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act 1971?

1971–ஆம் ஆண்டின் தமிழ்நாடு குடியிருப்பு உறைவிடம் கொண்டோர் (உடைமையுரிமை வழங்குச்) சட்டத்தின் சிறப்பு அம்சங்களை விவரிக்கவும்.

6. What are the powers of Record Officer and advisory Committee under the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969?

1969 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுருச் சட்டத்தின் கீழ் பதிவு அலுவலர் மற்றும் ஆலோசனைக் குழுவின் அதிகாரங்கள் என்ன?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Bar of Jurisdiction of Civil Courts.
உரிமையியல் நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பு தடை

(b) Deed of Apartment
அடுக்குமாடி கட்டட பத்திரம்

(c) Schedule IX
IX அட்டவணை

(d) Service Inam
சேவை இனாம்

(e) Cultivating Tenant
பயிரிடும் குத்தகைதாரர்

(f) Fair Rent
நியாய குத்தகை

(g) Land Board
நில வாரியம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A family consists of husband, wife and two minor children. Husband has total land of 30 st. Acres but wife has Stridhana land of 25 st. Acres. Calculate surplus land above the ceiling area.

ஒரு குடும்பம் கணவன், மனைவி மற்றும் இரண்டு மைனர் குழந்தைகளைக் கொண்டுள்ளது. கணவருக்கு 30 தரநிலை ஏக்கர் நிலம் உள்ளது. மனைவிக்கு சீதனச் சொத்தாக 25 தரநிலை ஏக்கர் நிலம் உள்ளது. அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் உபரி நிலத்தைக் கணக்கிடுக.

9. A cultivating tenant and landlord entered into an agreement of lease. They fixed rent of 1/4$^{th}$ of total produce. The crop is destroyed due to flood. The cultivating tenant requested for remission of rent. Discuss the procedure.

பயிரிடும் குத்தகைதாரர் மற்றும் நில உரிமையாளர் ஒரு குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டனர். மொத்த உற்பத்தியில் ¼ பங்கு வாடகையாக நிர்ணயம் செய்தனர். ஆனால் வெள்ளம் ஏற்பட்டு பயிர்கள் நாசமானது. குத்தகைதாரர் வாடகையை குறைக்கக் கோரினார். உரிமை கோருவதற்கான நடைமுறை பற்றி விவாதிக்கவும்.

10. A kudiyiruppu was transferred to an occupant. The occupant let the kudiyiruppu after 6 months of conferment of ownership for rent of 5000 Rs. Is the transfer of kudiyiruppu valid?

ஒரு குடியிருப்பு உறைவிடம் கொண்டவர்க்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. உறைவிடம் கொண்டவர் குடியிருப்பை 6 மாதத்திற்குப் பிறகு மற்றொரு நபருக்கு 5000 ரூபாய் வாடகைக்கு அனுமதித்தார். இந்தக் குடியிருப்பு மாற்றம் செல்லுபடியாகுமா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA8C**

6588–25

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various modes of acquiring and loss of territorial sovereignty under the International Law.

   சர்வதேச சட்டத்தின் கீழ் ஆள்நிலவரையறையை பெறுவதற்குண்டான மற்றும் இழப்பதற்குண்டான பல்வேறு வழிமுறைகளை விளக்கவும்.

2. "Every international wrongful act of a State entails the international responsibility of that State" – Discuss.

   "ஒவ்வொரு நாடும் அதன் ஒவ்வொரு சர்வதேசத் தீங்கிற்கும் அந்நாடே பொறுப்பாகும்" – விவாதிக்கவும்.

3. Evaluate the functions and powers of the General Assembly of U.N.O.

   ஐ.நா. அமைப்பின் பொது அவையின் அதிகாரங்களையும் மற்றும் பணிகளையும் மதிப்பீடு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'Asylum'. Explain the kinds of asylum.

   'அடைக்கலம்' வரையறு. அடைக்கலத்தின் வகைகளை விளக்கவும்.

5. Define 'Nationality'. Discuss the various modes of acquiring and losing of nationality.

"நாட்டுரிமை" வரையறு. நாட்டுரிமையை பெறுவதற்கான மற்றும் இழப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை விவாதிக்கவும்.

6. Define 'State Succession'. Explain the rights arising out of state succession with regard to 'treaty'.

'நாடுகளின் இறங்குரிமை' வரையறு. உடன்படிக்கை குறித்து இறங்குரிமைகளின் மூலம் பெறக்கூடிய உரிமைகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Art. 38(1) of the Statute of International Court of Justice.
சர்வதேச நீதிமன்ற சாசனத்தின் ஷரத்து 38(1)

(b) ECOSOC
சமூகப் பொருளாதார அமைப்பு

(c) Hugo Grotius
ஹியுகோ குரோஷியஸ்

(d) Dualism
இருமுகத் தன்மை

(e) Kinds of States
நாடுகளின் வகைகள்

(f) International Law Commission
சர்வதேச சட்ட ஆணையம்

(g) High Seas
ஆழ் கடல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a member of banned organization in State 'Y', kills a Minister of State 'Y' and flees to State 'X'. State 'Y' demands his extradition. State 'X' pleads, he is a political offender, hence, he will not be extradited. Decide.

'Y' நாட்டால் தடைசெய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்த 'A' என்பவர் அந்நாட்டின் மந்திரியை கொலை செய்துவிட்டு 'X' நாட்டிற்கு தப்பித்து விடுகிறார். 'Y' நாடு 'X' நாட்டை 'A' என்பவரை மீட்டொப்படைக்கும் படி கோருகிறது. ஆனால் 'X' நாடானது 'A' ஆனவர் அரசியல் குற்றவாளி, அதனால் அவரை மீட்டொப்படைக்க முடியாது எனக் கூறி வாதம் செய்கிறது. தீர்மானிக்கவும்.

9. State 'N' found the Island. But it did not establish control over it. Thereafter State 'P' exercises sovereignty over the Island. Now State 'N' claims that the Island belongs to it. However, State 'P' denies the claim of state 'N' on the ground that it exercises continuous sovereignty over it with intention to hold the Island. Decide.

ஓர் தீவானது 'N' நாட்டால் கண்டறியப்பட்டது. ஆனால் அத்தீவின் மீது அந்த நாடு எந்தவித ஆதிக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அதன் பிறகு அத்தீவின் மீது 'P' நாடு தனது இறையாண்மையை செலுத்திக்கொண்டு இருக்கின்றது. தற்பொழுது 'N' நாடானது அந்தத் தீவு எங்களுக்குரியது என உரிமை கோருகிறது. இருப்பினும் 'P' நாடானது அத்தீவின் மீது உட்கருத்துடன் அதன் தொடர்ச்சியான இறையாண்மையை செலுத்திக்கொண்டிருக்கும் காரணத்தினால் 'N' நாட்டின் கோரிக்கையை மறுக்கிறது. தீர்மானிக்கவும்.

10. State 'X' sent troops to protect the foreigners from mob in its capital territory. Instead of protecting them, the troops opened fire on the foreigners and killed three foreigners. Is the State 'X' liable for the wrongs of the troops? Decide.

வெளிநாட்டினரை பாதுகாப்பதற்காக 'X' நாடானது அதன் படைகளை தலைநகருக்கு அனுப்பிவிட்டது. வெளிநாட்டினரை பாதுகாப்பதற்குப் பதிலாக அப்படையானது அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் மூன்று வெளிநாட்டினர் இறந்துவிட்டனர். இச்செயலுக்காக 'X' நாடு பொறுப்பாகுமா? தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY